## 3.11 நேரடித் தேர்வில் உதவி இயக்குநர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு பயிற்சி அளிப்பது– திருத்திய பயிற்சி அட்டவணை

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ( சி 3) துறை

அரசாணை (நிலை) எண். 87

நாள் : 31.7.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.452, ஊரக வளர்ச்சி (இ1) துறை நாள் 1.9.2005
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.100682/04/பயிற்சி1, நாள் 24.7.2006

**ஆணை**

அரசாணை (நிலை) எண். 452, ஊரக வளர்ச்சித் (இ1) துறை, நாள் 1.9.2005–ல் நேரடி தேர்வில் உதவி இயக்குநர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பது சம்மந்தமாக அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. தற்பொழுது ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் நேரடி தேர்வில் உதவி இயக்குநர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு 54 வாரங்களுக்கு பயிற்சி அளிப்பது சம்மந்தமாக பயிற்சி அட்டவணை தகுந்த மாற்றங்களுடன் திருத்திய பயிற்சி அட்டவணை ஒன்று அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. பயிற்சி முடிந்தவுடன் கீழ்கண்ட அறிக்கைகளை பயிற்சியாளர்கள் ஊரக வளர்ச்சி இயக்குநர் (பயிற்சி) அவர்களுக்கு சமர்பிக்க வேண்டுமென ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1. ஒரு கிராம ஊராட்சியின் சமூக பொருளாதார ஆய்வு
2. ஒரு கிராம ஊராட்சியின் செயல்பாடு தொடர்பான ஒரு ஆய்வு அறிக்கை
3. மாவட்டத்தை ஒரு அலகாக எடுத்துக் கொண்டு ஒரு மத்திய (அல்லது) மாநில அரசு திட்டத்தினை பகுப்பாய்வு சார்ந்த ஆய்வு அறிக்கை.

மேலும் இந்த மூன்று அறிக்கைகளும் மறைமலை நகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் இரண்டாவது கட்ட பயிற்சி பெறும் பொழுது பயிற்சியாளர்கள் அளிக்க வேண்டுமென்றும், இந்த அறிக்கைகள் நிறைவு அளிக்கவில்லையென்றால் பயிற்சி நீட்டிக்கப்படும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமாக ஆய்வு செய்தது, ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ள திருத்திய பயிற்சி அட்டவணைக்கும் (இணைக்கப்பட்டுள்ளது), பத்தி 2–ல் உள்ள கருத்துருவிற்கும் ஒப்புதல் அளித்தும் மேலும், பயிற்சி பெறுகின்ற கிராம ஊராட்சி, மாவட்டத்தை இந்த அறிக்கைகளுக்கு அலகாக கொள்ளலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்

## 3. TRAINING

### இணைப்பு – அரசாணை (நிலை) எண்.87

| | | |
|---|---|---|
| 1 | பவானி சாகரிலுள்ள சி.எஸ்.டி.ஐ தற்பொழுது அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை. | 5 வாரங்கள் |
| 2 | தலைமைச் செயலக பயிற்சி | 1 வாரம் |
| 3 | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்ககம் | 1 வாரம் |
| 4 | மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்<br>அ. ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் விதிகள் –1 வாரம்<br>ஆ. திட்டங்களும் மற்றும் தொழில் நுட்ப அம்சங்களும் – 1 வாரம் | 2 வாரங்கள் |
| 5 | மாவட்ட ஆட்சியர் | 1 வாரம் |
| 6 | ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் | 1 வாரம் |
| 7 | செயற்பொறியாளர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 1 வாரம் |
| 8 | நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) | 1/2 வாரம் |
| 9 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | 1 வாரம் |
| 10 | உதவி இயக்குநர் (தணிக்கை) | 1/2 வாரம் |
| 11 | உதவி செயற்பொறியாளர் (பி.பி.எம்) | 1/2 வாரம் |
| 12 | கிராம ஊராட்சி | 2 வாரங்கள் |
| 13 | கிராம பஞ்சாயத்துகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சிறப்பு முயற்சி | 1 வாரம் |
| 14 | வட்டார வளர்ச்சி அலுவலர்<br>அ. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) – 1 வாரம்<br>ஆ. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)– 1 வாரம்<br>இ. ஒன்றிய பொறியாளர் – 2 வாரம் | 4 வாரங்கள்<br>4 வாரங்கள் |
| 15 | வட்டார வளர்ச்சி அலுவலர் தனி பொறுப்பு | 2 வாரங்கள் |
| 16 | மாவட்ட ஊராட்சி | 1/2 வாரம் |
| 17 | முன்னோடி வங்கியில் பயிற்சி | 1/2 வாரம் |
| 18 | அரசு சாராத அமைப்புகளில் பயிற்சி | 1 வாரம் |
| 19 | நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) (II முறை) | 1 வாரம் |
| 20 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (ஊரக வளர்ச்சி) (II முறை) | 1 வாரம் |
| 21 | உதவி இயக்குநர் (தணிக்கை) (II முறை) | 1 வாரம் |
| 22 | உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை | 1 வாரம் |
| 23 | திட்ட அலுவலர் ஊரக வளர்ச்சி முகமை (II முறை) | 2 வாரங்கள் |
| 24 | செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி முகமை (II முறை) | 1 வாரம் |
| 25 | திட்ட அலுவலர் மகளிர் திட்டம் | 1 வாரம் |
| 26 | உதவி இயக்குநர் (பேரூராட்சி) | 1/2 வாரம் |
| 27 | நகராட்சி ஆணையர் | 1/2 வாரம் |
| 28 | நகராட்சி நிர்வாக மண்டல ஆணையர் | 1/2 வாரம் |
| 29 | மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் | 1 நாள் |
| 30 | மாவட்ட மேலாளர் (தாட்கோ) | 1/2 வாரம் |
| 31 | கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை) | 1 வாரம் |
| 32 | செயற்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) | 1 வாரம் |
| 33 | செயற்பொறியாளர் (பொதுப் பணித் துறை) | 1/2 வாரம் |
| 34 | செயற்பொறியாளர் (கட்டிடங்கள்) | 1/2 வாரம் |
| 35 | செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) | 1/2 வாரம் |
| 36 | மாவட்ட வன அலுவலர் | 1/2 வாரம் |
| 37 | செயற்பொறியாளர் (தமிழ்நாடு மின்வாரியம்) | 1/2 வாரம் |
| 38 | இணை இயக்குநர் (வேளாண்மை) | 1/2 வாரம் |
| 39 | இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) | 1/2 வாரம் |
| 40 | துணை பதிவாளர் (பால் வளம்) | 1/2 வாரம் |

| | | |
|---|---|---|
| 41 | துணை இயக்குநர் (நகர் மற்றும் ஊர் அமைப்பு) | 1/2 வாரம் |
| 42 | இணை பதிவாளர் (கூட்டுறவு) | 1/2 வாரம் |
| 43 | மாவட்ட சமூக அலுவலர் | 1/2 வாரம் |
| 44 | திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்) | 1/2 வாரம் |
| 45 | இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம்) | 1/2 வாரம் |
| 46 | துணை இயக்குநர் ( பொது சுகாதாரம்) | 1/2 வாரம் |
| 47 | கிராம நிர்வாக அலுவலர் | 1/2 வாரம் |
| 48 | வருவாய் ஆய்வாளர் அலுவலர் | 1/2 வாரம் |
| 49 | வட்டாட்சியர் | 1/2 வாரம் |
| 50 | வருவாய் கோட்ட அலுவலர் | 1/2 வாரம் |
| 51 | மாவட்ட வருவாய் | 1/2 வாரம் |
| 52 | மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரியிடம் பயிற்சி | 1/2 வாரம் |
| 53 | மாவட்ட பிற்பட்ட நல அதிகாரியிடம் பயிற்சி | 1/2 வாரம் |
| 54 | மாவட்ட கரூவூலம் | 2 நாள் |
| 55 | முதன்மை கல்வி அலுவலர் | 1/2 வாரம் |
| 56 | உதவி இயக்குநர் (கனிம நலம்) | 1/2 வாரம் |
| 57 | மாவட்ட பதிவாளர் | 1/2 வாரம் |
| 58 | வணிக வரி அலுவலர் | 1/2 வாரம் |
| 59 | மாவட்ட ஆட்சியர் (II முறை) | 1 வாரம் |
| 60 | மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (II முறை) | 2 வாரங்கள் |
| 61 | மாநில தேர்தல் ஆணையம் | 1/2 வாரம் |
| | மொத்தம் | 54 வாரங்கள் |